முருகப்பெருமான் துணை

**மகான் யோகச்சித்தர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.06.2022**, வியாழக்கிழமை

1. ஆறுமுகனார் சூட்சும வடிவாக
அண்ணலாக வந்த குருவே
ஆறுமுக அரங்கமகா ஞானியே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது விடைதிங்கள்
குறைவிலா இருபானாற் திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 26 ம் நாள், 09.06.2022 வியாழக்கிழமை)
அறிவிப்பேன் அருளாசி தன்னை
அரங்கனுக்கு யோகச்சித்தர் யானும்
3. யானும் உலகோர் வளமுற உரைப்பேன்
உண்மை நெறி தெய்வநெறி
ஞானமெனும் சத்திய நெறி
நம்பிக்கைதரும் சன்மார்க்க நெறி
4. நெறிதனை கலியுக மக்கள்
நிம்மதி தரும் மார்க்கமென
அறிந்து தெளிந்து அனுகி
அரங்கன் ஆசிபட ஏற்றுமே
5. ஏற்றுமே கைவிடா வண்ணம்
இயம்பிட தீட்சை தன்னை
ஆற்றல்பட பெற்று நன்கு
அரங்கர் மயம் அனைத்தும் எனும்
6. எனும் பூரண சரணடைவை
எல்லா மக்களும் கண்டுவிடவே
ஞானமெனும் சூட்சும பலம்
ஞானபண்டிதன் சக்தியாக வந்து
7. வந்துமே மக்களிடை மாற்றம்
வளமும் வளர்ச்சி நிலையாக
சிந்தைபட எந்த வகையிலும்
சித்திகளாக மாறி இனிதே
8. இனிதே அரங்கன் தலைமை
ஏற்று வரும் மக்களுக்கு
கனிவேலவன் காட்சி உண்டு
கருணையும் கிட்டி உலகோர்
9. உலகோர் ஞானவான் ஆகி
உலகை மாற்றும் ஞானிகள் ஆகி
வளமான ஞான பூமியாக
வையகத்தை மாற்றும் பலம் கூடி

10. கூடியே அரங்கன் அவதாரம்
குவலயம் அடையும்படிச் செய்து
தேடியே சகல திக்கிலும்
தேசிகன் பெருமையை பரப்பி

11. பரப்பியே ஞான உலகமதை
பக்குவமுள்ள மக்களை கொண்டு
நிரப்புவர் ஞான ஆட்சிகாலமாக
நிகழ்த்திவந்த அருளாசி முற்றே

–சுபம்–